பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 223


செவ்வாய்க்கிழமை
07 ஜூலை 2026

ஆனி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

நீர்கொழும்பு

# சிறையில் கலவரம்; 26 பேர் உயிரிழப்பு!

தெற்கில் உச்சக்கட்ட குழப்பம்



கொழும்பு, ஜூலை 7

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கலவரம் நேற்றும் தொடர்ந்தது. இந்தக் கலவரம் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகள் 7 பேரும் சிறைக்கைதிகள் 19 பேருமாக 26 பேர் உயிரிழந்தனர். அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

»11

## சிறைச்சாலைக் கலவரத்துக்கு பொறுப்பேற்க வேண்டும் அரசு

சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 7

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள கலவரத்துக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்

»11

## அரச வாகனம் மோதி முதியவர் துயரச்சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 7

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் சில்லாலையைச் சேர்ந்த சாம் தவராசா (வயது-80) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடல்சார்

»11

## கலவரத்துக்கான பொறுப்பை ஏற்பதற்கு அரசாங்கம் தயார்

நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்துக்கான பொறுப்பை ஏற்பதற்குத் தயார் என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»11

சாவகச்சேரி உப தவிசாளர் பதவிநீக்கம்

## இடைக்காலத் தடைக்கு மேல் நீதிமன்றம் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோர் வடமாகாண ஆளுநரால் பதவிநீக்கப்பட்ட விடயத்தில், இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குவதற்கு வடமாகாண மேல்நீதிமன்றம் மறுத்துள்ளது.

சாவகச்சேரி நகரசபையின்

»11

கிளிநொச்சி

## புன்னைநீராவியில் இனிமேல் 2 கிராம அலுவலர் பிரிவுகள்

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி-புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவு நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

புன்னைநீராவி கிழக்கு, புன்னைநீராவி மேற்கு

»11

## நீர்கொழும்புச் சிறைச்சாலை மோதல்; விசாரணைக்கு விசேட குழு நியமனம்

விரிவு பக்கம்:-03





## எல் நினோவின் தாக்கத்தால் இலங்கைக்கு நீடித்த வறட்சி

வளிமண்டலவியல் திணைக்களம் கணிப்பு

கொழும்பு, ஜூலை 7

எல் நினோவின் தாக்கத்தால் இலங்கையில் கடும் வறட்சி ஏற்படும் என்று வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்னகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல் நினோ தொடர்பில் பொதுமக்கள்

»11



## குளத்தை ஆக்கிரமிக்க பெண்ணொருவர் முயற்சி

வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஜூலை 7

வவுனியா கோவில்குளத்தின் நீரேந்து பகுதி, பெண் ஒருவரால் ஆக்கிரமிக்கப்படுவதாகக் குறிப்பிட்டு கமக்கார அமைப்பினரும் பொதுமக்களும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான

»11

## கோத்தாபயவின் மனு உயர்நீதிமன்றுக்கு மாற்றம்?

கொழும்பு, ஜூலை 7

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கக் கோரிய கோத்தாபய ராஜபக்சவின் மனுவை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தான் கைதாவதைத் தடுத்து நிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோத்தாபய ராஜபக்ச அண்மையில் ரிட்மனு தாக்கல் செய்திருந்தார். பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப்புலனாய்வுத்

»11

முச்சந்தி முனி

"வெலிக்கடைச் சிறையில தொடங்கின கறுப்பு ஜூலையின்ர பலியெடுப்பு நீர்கொழும்புச் சிறை வரையும் நீளுது கண்டியளோ"

மக்கள் ம[illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4482 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 08 35 41 49 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1549 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 20 28 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0508 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 1 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2588 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 37 50 62 63 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6240 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 5 0 0 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2270 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 05 13 52 74 |
| விசேட எழுத்து | I |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 06.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0356 |
| வெற்றி இலக்கினம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 22 45 |

# 61 ஆயிரத்தைக் கடந்த டெங்கு நோயாளர்கள்

**கொழும்பு, ஜூலை 7**

**நாட்டில் இந்த வருடத்தில் இதுவரை 61 ஆயிரத்து 60 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்தில் ஒரு மாதத்தில் பதிவான அதிகூடிய நோயாளர்களாக கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் 21 ஆயிரத்து 546 பேர் கண்டறியப்பட்டனர். இந்த நிலைமை இன்று மோசமடைந்துள்ளதை அடுத்து, நாடு முழுவதும் 142 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மாகாண ரீதியாக மேல் மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மட்டத்தில் கொழும்பு மாவட்டம் முதலாமிடத்திலும், கம்பஹா மாவட்டம் இரண்டாம் இடத்திலும் உள்ளன. அதே வேளை நாட்டின் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் வட மாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர் என்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 06.07.2026 | திங்கட்கிழமை | 0948 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| V | 2 0 6 4 0 8 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 06.07.2026 | திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3214 | G | 35 36 43 49 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 06.07.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 13 29 52 53 | 5375 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 06.07.2026 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1044 | 03 41 45 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 06.07.2026 | திங்கட்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 01 04 25 46 | 4926 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 06.07.2026 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 17 | 12 18 43 60 | 2390 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 06.07.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 12 53 75 76 | 3040 |

## நாட்டில் மருந்துக்கு கடும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 7

அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமன்றி, தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களிலும் தற்போது மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தனியார் துறைக்கு மருந்துகளை வழங்கும் பல விநியோகஸ்தர்கள், தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையின் கொள்கைகள் மற்றும் பதிவு செய்யும் செயல்முறைகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலைமையே தற்போதைய தட்டுப்பாட்டுக்கு முதன்மைக் காரணமாகவுள்ளது. மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபை சந்தையில் போட்டித்தன்மையுடன் மருந்துகளை விநியோகிப்பதற்குத் தேவையான அதிகளவிலான நிறுவனங்களைப் பதிவுசெய்யத் தவறியுள்ளதால் இந்தநிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது. இதன் விளைவாக அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மாத்திரைகள், கெப்ஸ்யூல்கள் மற்றும் தடுப்பூசிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (க-இ)

## நீர்கொழும்புச் சிறைச்சாலை மோதல்; விசாரணைக்கு விசேட குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 7

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் கைதிகளின் இரு தரப்பினருக்கு இடையே இடம்பெற்ற மோதல் குறித்து விசாரணை நடத்துவதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தால் இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார். நீர்கொழும்புச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் மோதல் இடம்பெற்றிருந்தது. விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும் இடையே இந்த மோதல் இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)



## விபத்துத் தடுப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 7

தேசிய விபத்துத் தடுப்பு வாரத்தை இந்த வாரம் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்குச் சுகாதார அமைச்சு நடவக்கை எடுத்துள்ளது. மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் கணிசமானோர் விழுதல், வீதி விபத்துகள், வேலைத்தள விபத்துகள், நீரில் மூழ்குதல் மற்றும் வீட்டு விபத்துகள் காரணமாகவே சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் சுகாதாரத் துறைக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதே இந்த வேலைத்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். அதற்கமைவாக நேற்று வீதி விபத்துகளைத் தடுக்கும் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இன்று வேலைத்தளங்களில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கும் தினமாகவும், நாளை வீடுகள் மற்றும் முதியோர் இல்லங்களில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கும் தினமாகவும், நாளைமறுதினம் நீரில் மூழ்கி ஏற்படும் விபத்துகளைத் தடுக்கும் தினமாகவும், எதிர்வரும் 10ஆம் திகதி பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கும் தினமாகவும் கடைப்பிடிக்கப்படும். இந்த வாரத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஆபத்தான இடங்களைக் கண்டறிதல் மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான குறுகிய, நடுத்தர, நீண்ட காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. அத்துடன் கல்வித்துறை, பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் அரச நிறுவனங்களின் கூட்டுப்பங்களிப்புடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (க-இ)

## 3 இலட்சம் குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

கொழும்பு, ஜூலை 7

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிதண்ணீர்த் திட்டங்கள் மூலம், நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் மூன்று இலட்சம் குடும்பங்கள் பயனடையவுள்ளன. அதற்கமைவாக சிறுநீரக நோய் பரவலாகக் காணப்படும் பகுதிகள் உட்பட பல பிரதேசங்களின் குடிதண்ணீர்த் தேவை இதன்மூலம் பூர்த்தி செய்யப்படும். லக்கல புதிய நகர குடிதண்ணீர்த் திட்டம் ஊடாக, 6 ஆயிரத்து 800 குடும்பங்களுக்கும், தம்பிதேகம குடிதண்ணீர்த் திட்டம் ஊடாக 25 ஆயிரம் குடும்பங்களுக்கும், அநுராதபுரம் வடக்கு குடிதண்ணீர்த் திட்டம் (IIஆம் கட்டம்) ஊடாக 67 ஆயிரம் குடும்பங்களுக்கும், பொல்கஹவெல, பொத்துஹெர மற்றும் அலவ்வ கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டம் ஊடாக 38 ஆயிரம் குடும்பங்களுக்கும், கண்டி வடக்கு பாததும்பர கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டம் ஊடாக ஒரு இலட்சத்து 73 ஆயிரம் குடும்பங்களுக்கும் குடிதண்ணீர் விநியோகிக்கப்படும். இந்தத் திட்டங்கள் நிறைவடையும் போது, இலங்கையின் குடிதண்ணீர் விநியோகக் கட்டமைப்பு கணிசமான அளவில் உயர்வடையும் என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஒழிப்பில் 632 சந்தேகநபர்கள் கைது



கொழும்பு, ஜூலை 7

**பொலிஸ்மா அதிபரின் நேரடி அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் போது 632 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**


குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அனைத்துப் பிராந்தியங்களையும் உள்ளடக்கி சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டன இதன்போது 27,736 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 20 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 168 பேரும், பிடியாணை உடைய 261பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் மதுபோதையில் வாகனம் செலுத்திய 98 சாரதிகளும், ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய 138 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபட்ட 4,267 பேருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எஇ)

## ஹிருணிகாவின் மேன்முறையீடு விசாரணைக்கு திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட கடுங்காவல் சிறைத் தண்டனையில் இருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி ஹிருணிகா பிரேமச்சந்திரவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. 2015ஆம் ஆண்டு தெமட்டகொட பகுதியில் உள்ள கடையொன்றில் பணிபுரிந்த இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று, தாக்கி, சட்டவிரோதமாகச் சிறைபிடித்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவிற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தண்டனையிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி ஹிருணிகா பிரேமச்சந்திரவி னால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி நடத்துவதற்கு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (எ-இ)



## விசேட சுற்றிவளைப்பில் 900 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 7

போதைப்பொருள் விநியோகத்தை ஒழித்து, அடிமையானவர்களைப் புனர்வாழ்வளிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் 'முழு நாடுமே ஒன்றாக' திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் நடத்தப்பட்ட அதிரடிச் சுற்றிவளைப்புகளில் 900 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை மட்டும் 893 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 227 கிராம் ஹெரோய்னுடன் 287 பேரும், 501 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 358 பேரும் கைதுசெய்யப்பட்டனர். மேலும், 513 கிராம் கஞ்சா மற்றும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கஞ்சா செடிகளுடன் 206 பேரும், போதை மாத்திரைகளுடன் 41பேரும் சிக்கியுள்ளனர். (எ-இ)




## விபத்தில் பாதசாரி உயிரிழப்பு

அநுராதபுரம், ஜூலை 7

அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்த பாதசாரியை மோதித்தள்ளியது. இதில் பாதசாரி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து அநுராதபுரம் கெக்கிராவ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. விபத்தில் கெக்கிராவப் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (க-இ)

## மொஹான் கருணாரத்னவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

அநுராதபுரம், ஜூலை 7

வெசாக் பொதுமன்னிப்பின்கீழ், போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கைதி ஒருவரைச் சட்டவிரோதமாக விடுவித்த அநுராதபுரம் சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்னவுக்குச் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண மேல் நீதிமன்றத்தில் அவர் மீதான 5 குற்றச்சாட்டுகளும் வாசித்துக் காட்டப்பட்டன.

2025 மே மாதப்பகுதியில், 28 வழக்குகளில் தொடர்புடைய அத்துல திலகரத்ன என்ற கைதியைச் சட்டவிரோதமாக விடுவிக்கப் போலி ஆவணங்களைத் தயாரித்ததாக இவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. தன் மீதான குற்றச்சாட்டுகளை முன்னாள் அத்தியட்சகர் மறுத்ததைத் தொடர்ந்து, அவரை 25,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 2 இலட்சம் ரூபா சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிமன்றம் அனுமதித்ததுடன், வழக்கை ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்த வழக்காளி அத்துல திலகரத்னவும் குற்றச்சாட்டை மறுத்ததால் பிணையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் பிறிதொரு நிதி மோசடிக்காக 5 வருடச் சிறைத்தண்டனை அனுபவித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)




## சிம்பிளாப் போன சிறைச்சாவுகள்

**விருமாண்டி படத்தில வாறமாதிரி, நீர்கொழும்புச் சிறைச்சாலைக்குள்ள நேற்றும் முந்த நாளும் நடந்த பயங்கரக் கலவரத்தில, 5 சிறை அதிகாரிகள் உட்பட 25 பேர் செத்திருக்கினம். 100க்கும் அதிகமான கைதியளும், பொலிஸ்காரரும், சிறைச்சாலை அதிகாரியளும் காயத்தோட ஆஸ்பத்திரியில கிடக்கினம். சிறைக்குள்ள இவ்வளவு பெரிய கலவரம் வெடிக்க என்ன காரணம் எண்டு பார்த்தால், அதுதான் ஆகப் பெரிய கொடுமை! சிறைக்குள்ளேயே ஒரு பெரிய போதைப்பொருள் நெட்வேர்க் ஓடிக்கொண்டிருக்கு. அதுல ஒரு கைதி போதைப்பொருள் கடத்தல் விசயத்தை வெளியில கசியவிட்டான் எண்டு சொல்லி, போதைக்கு ஆதரவான கோஷ்டிக்கும் எதிரான கோஷ்டிக்கும் இடையில அடிபாடு தொடங்கியிருக்கு. கடைசியில ஆமி, அதிரடிப்படை, பொலிஸ் எண்டு எல்லாரும் சுட்டுக்கொண்டு உள்ளுக்குப் புகுந்து, ஹெலிகொப்டர், ட்ரோன் கமரா எல்லாம் வச்சுத்தான் இப்ப நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்கினம். அந்தச் சிறையில அடைக்கப்பட்டிருக்கிற கைதியளின்ர அம்மாமார், மனிசிமார், பிள்ளையள் எல்லாம் தங்கடை உறவுகளுக்கு என்ன நடந்ததோ எண்டு நெஞ்சு பதறி, அழுது குளறுறதைப் பாக்கேக்க, எங்கட காணாமல் போன அம்மாமார் தான் கண்ணுக்க வருகினம்.**

**இப்பிடிச் சிறைக்குள்ள சனம் கொத்துக்கொத்தாச் சாகுறது எங்கட நாட்டுக்கு ஒண்டும் புதிசில்லைத் தான். உதெல்லாத்துக்கும் வெலிக்கடைப் படுகொலை தான் பிள்ளையார் சுழி. 1983இல வெலிக்கடை சிறையில நடந்த இனக்கலவரத்தில 53 தமிழ்க் கைதியளை அநியாயமா வெட்டிக் கொண்டவங்கள். 2012இலயும் வெலிக்கடையில அதிரடிப்படை உள்ளுக்க புகுந்து சுட்டதில 27 கைதிகள் செத்தவை. 2000ஆம் ஆண்டு பிந்துனுவெவ சிறையில எங்கட 26 தமிழ்ப் பெடியளை வெளியால இருந்து வந்த காடையரும் ஆமியும் சேர்ந்து அடிச்சுகம், வெட்டியும் சாக்கொண்டவங்கள். 2020 கொரோனாக் காலத்தில அநுராதபுரம், மஹர சிறையளில பிணை கேட்டுப் போராடின கைதியளைப் பொலிஸ் சுட்டுக்சாக்காட்டினது. இப்பிடிச் சிறையளில ஆக்களின்ர உயிரைப் பலி எடுக்கிறது இலங்கையில சிம்பிளான விசயமாப் போட்டுது.**

**'கட்டுவெல்லகம சுரேஷ்' எண்ட பாதாள உலகத் தறுதலைதான் நீர்கொழும்புச் சிறையில நடந்த இந்தக் கலவரத்துக்கு தலைமை தாங்கியிருக்கிறான். அவனைப் பிடிச்சு விசாரிச்சால் உண்மையா போதைப்பொருள் பிரச்சினையாலதான் இப்பிடிக் கலவரம் வந்ததா? இல்லாட்டி ஈஸ்டர் தாக்குதல் மாதிரிவேற ஏதும் அரசியல் ஆதாயத்துக்காக நடந்ததா? எண்ட உண்மை தெரியவரும். சிறைக்குள்ளேயே போதைப்பொருள் இந்தளவுக்கு வேரூண்டியிருக்கு எண்டால், வெளியில சமூகத்தில அது எப்பிடிப் பரவிக் கிடக்கும் எண்டு நீங்களே யோசிச்சுப் பாருங்கோ செத்தவன் கைதியோ, அதிகாரியோ அவனும் ஒரு குடும்பத்து மகனோ, அப்பாவோ தானே? குற்றம் செய்தவனைப் பாதுகாப்பா வச்சிருக்கவேண்டியது இந்த அரசாங்கத்தின்ர கடமை. இந்த 25 பேரின்ர சாவுக்கும் இண்டைக்கு அரசாங்கம்தான் முழுப்பொறுப் பேற்கோணும்! இனிமேலாவது இப்பிடியான கொடூரம் நடக்காம இருக்க இந்தச் சிறைச்சாலை சிஸ்டத்தை உருப்படியா மாத்தோணும். இல்லாட்டி இனியும் இப்பிடி சிறைச்சாவுகள் தொடரும் கண்டியளோ.**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உட்கட்டமைப்பு வளர்ச்சியில் அரசாங்கம் கவனம் செலுத்தும்

*அமைச்சர் பிமல் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜுலை 7**

**அரசாங்கம் அடுத்த கட்டமாக நாட்டின் உட்கட்டமைப்பு, கல்வி உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்தும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்குப் பதிலளித்த அவர், பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன், நாட்டின் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் சமூகச் சூழலை நிலைப்படுத்துவதற்கே அரசாங்கம் முதலிடம் கொடுத்ததாகக் கூறினார். 'மெட்ரோ பேருந்து' சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மேலும் 800 பேருந்துகள் இணைக்கப்படவுள்ளன. அதிவேக நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துதல், புதிய மருத்துவப் பீடங்களை நிறுவுதல் போன்ற எதிர்காலத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. நிதிப் பற்றாக்குறை இல்லை. காலாவதியான நிர்வாக நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறையே சில திட்டங்களைத் தாமதப்படுத்துகின்றது. அடுத்த 3 ஆண்டுகளுக்குள் இதற்குத் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பாகிஸ்தான் தூதுவருடன் ஹந்துன்நெத்தி சந்திப்பு

கொழும்பு, ஜுலை 7

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கும், பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) டாக்டர் நய்யார் நசீருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இருதரப்பு உறவுகள், புதிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப், கராச்சி பகுதிகள் ஊடாகத் தொழில் பரிமாற்றங்களைச் செய்யவும், இரத்தினக்கல் துறையில் தொழில்நுட்பப் பரிமாற்றங்களை நடத்தவும் இரு தரப்பும் இணங்கின.

பாகிஸ்தானுக்கான இலங்கைத் தேயிலை ஏற்றுமதியை மீண்டும் நிலைநிறுத்தவும், அன்னாசி மற்றும் அவகாடோ ஏற்றுமதித் தடைகளை நீக்கவும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) தலையீட்டில் பாகிஸ்தானில் வணிகக் கூட்டமொன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், தோல் பொருள்கள் ஊக்குவிப்பு மற்றும் இலங்கையின் மருந்து உற்பத்தித் துறையில் பாகிஸ்தானிய முதலீடுகளை அதிகரிப்பது குறித்தும் வெற்றிகரமான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)



## கோத்தாவின் உரத் திட்டத்தை அழித்தது அசோக ரன்வலவே!

பிரசாத் சிறிவர்த்தன எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுலை 7

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இயற்கை உரத் திட்டத்தை முழுமையாக அழித்தது தற்போதைய சபாநாயகர் அசோக ரன்வலவே என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்த்தன பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். மாவனெல்லையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

இயற்கை உரத் திட்டத் தோல்வி குறித்து கோத்தாபயவிடம் கேட்டபோது அவரே இந்த உண்மையை ஒப்புக்கொண்டார். ஜே.வி.பி.யின் முக்கியமான உறுப்பினரான அசோகரன்வல, தனது நிறுவனத்தினூடாக இத்திட்டத்தை முன்னெடுத்துச் சதி செய்துள்ளார். இந்தச் சதிக்கு பிரதி உபகாரமாகவே அவருக்குச் சபாநாயகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, விஜயதாச ராஜபக்சவின் வீட்டில் வைத்து 25 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். ஜே.வி.பி.யினர் வாங்கினால் அது 'பரிசு', பிறர் வாங்கினால் 'திருட்டு' என்று முத்திரை குத்துவது ஏன்?" எனப் பிரசாத் சிறிவர்தன கேள்வி எழுப்பியுள்ளார். (எ-இ)

## ஒருமைப்பாடு பாதிக்கப்படுவதை மௌனமாகப் பார்க்க முடியாது

*சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு*

கொழும்பு, ஜுலை 7

நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்படும் போது அதனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். கதிர்காமத்திற்கு வழிபாடுகளுக்குச் சென்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மிக நுட்பமான முறையில் நாட்டில் ஏகாதிபத்தியம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். முன்னர் நாடுகள் நேரடியாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில், தற்போது பொருளாதார மற்றும் வர்த்தக சக்திகளைப் பயன்படுத்தி மறைமுக ஆக்கிரமிப்புகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். உலக நாடுகள் மட்டுமன்றி, சர்வதேச நிறுவனங்களும் நாட்டின் தேசிய செயற்றிட்டங்கள் மீது ஆளுகை செலுத்துகின்றன. எனவே, எவ்வித பாகுபாடும் இன்றி, இந்த மறைமுக பொருளாதார ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். (எ-இ)



## இளைஞர்களின் எதிர்காலத்தை நாசமாக்கியுள்ளது அரசாங்கம்

*நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு!*

கொழும்பு, ஜுலை 7

பொய் வாக்குறுதிகளை வழங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய தற்போதைய அரசாங்கம், நாட்டின் இளைஞர் சமூகத்தின் எதிர்காலத்தை முற்றாக நாசமாக்கியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச குற்றம் சாட்டியுள்ளார்.

மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வேலைவாய்ப்பு கேட்கும் பட்டதாரிகள் வீதிகளில் அடித்து விரட்டப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு உரமோ, நெல்லுக்கு நியாயமான விலையோ இல்லை. உலகமே உணவுப் பற்றாக்குறைக்குத் தயாராகும் போது, இந்த அரசு அரிசியை இறக்குமதி செய்யவே திட்டமிடுகிறது. மத்திய கிழக்கிலும், இஸ்ரேலிலும் போர்ச் சூழலுக்கு மத்தியில் உழைத்து எமது தொழிலாளர்கள் அனுப்பும் டொலருக்கும் இந்த அரசு வரி விதிக்கின்றது. இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள், சர்வதேச நாணயநிதியம் மற்றும் கடந்த அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்க்கிறார்கள். மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் மக்களை ஒடுக்குவதும், சிறையிலடைப்பதும் மாத்திரமே-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




உண்மை - நேர்மை - அஞ்சாமை

## சமஷ்டியே சரியான தீர்வு!

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான விவாதம், எப்போதும் 13ஆம் திருத்தச்சட்டத்தை மையப் படுத்தியே சுழன்றடிக்கிறது. அரசியல் தீர்வின் ஆரம் பப் புள்ளியாக 13ஐப் பயன்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியத் தரப்பின் ஒரு பகுதியினர் வாதிட, 13 என்பது தமிழ் மக்களை ஒற்றையாட்சிச் சிறைக்குள் நிரந் தரம ாகத் தள்ளிவிடும் பேரபாயம், எனவே அதை முற் றாக நிராகரிக்க வேண்டும் என மற்றொரு தரப்பு முழங்கி வருகிறது. மிக நீண்டகாலமாகத் தொடரும் இத்தகைய மாறுபட்ட சித்தாந்த மோதல்களுக்கு மத்தியில், அண்மையில் உள்ளூராட்சிசபை விவகாரங்களில் வட மாகாண ஆளுநர் தலையிட்டு சாவகச்சேரி நகரசபை யின் உப தவிசாளரையும், வவுனியா மாநகர சபையின் முதல்வரையும் பதவிநீக்கம் செய்திருக்கும் விடயம், தமிழ் மக்களின் அரசியல் இருப்பைக் கேள்விக்குறியாக் கியுள்ள அதேவேளை, 13ஆம் திருத்தத்தின் சீத்துவக் கேட்டையும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் மாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள மிதமிஞ்சிய அதிகாரங்களின் அடிப்படையில், மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன் றங்களின் மக்கள் பிரதிநிதிகளையே பதவியிலிருந்து நீக்க முடியும் என்றால், இங்கு 'மக்களாட்சிக் கோட்பாடு' என்பது வெறும் கண்துடைப்பா என்ற நியாயமான கேள்வி எழுகிறது. கொழும்பிலிருக்கும் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநர், மாகாண மற்றும் உள்ளூர் நிர்வாகங்களின் மீது இத்தகைய சர்வாதிகாரப் போக்கைக் கட்டவிழ்த்துவிட 13ஆம் திருத்தமே சட்ட பூர்வமாக வழிவகுத்துள்ளது. 13ஐ ஒரு தொடக்கப் புள்ளி யாகக் கொள்ளலாம் என்று நம்பும் மிதவாதத் தமிழ்த் தரப்புகளின் வாதங்களை, ஆளுநரின் இந்த அதிரடி நடவடிக்கைகள் முற்றிலும் தவிடுபொடியாக்கியுள்ளன. அத்துடன், '13'ஐப் பாதுகாப்பற்ற ஒற்றையாட்சிப் பொறி முறை என்று விமர்சிப்பவர்களின் கூற்று எவ்வளவு தீர்க்க தரிசனமானது என்பதற்கான ஆகச்சிறந்த சான்றாகவே ஆளுநரின் இந்த நடவடிக்கைகள் அமைந்துவிடப் போகின்றன.

உண்மையில், 13ஆம் திருத்தமும் அதன் விளைவாக உருவான உப்புச்சப்பற்ற மாகாணசபை முறையும் இலங் கையின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் ஒரு நிரந்தர மான, நீதியான அரசியல் தீர்வாக அமைய முடியாது என்பதை இந்தச் சம்பவங்கள் மீளவும் நிரூபித்துள்ளன. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் திணிக்கப்பட்ட இந்த 13ஆம் திருத்தம், ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக் களின் சுயநிர்ணய உரிமையையோ அல்லது சமஷ்டி அடிப் படையிலான சுயாட்சியையோ அங்கீகரிக்கவில்லை. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங் களுக்கு வழங்கத் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக மறுத்துவரும் நிலையில், இருக்கும் அரைகுறை நிர்வாக அதிகாரங்களையும் ஒற்றையாட்சிக் குரிய ஆளுநர் பதவியைக் கொண்டு கொழும்பு பறித் தெடுப்பதுதான் இங்கு மாபெரும் சாபக்கேடாகும். மாகாணசபை என்பது மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக் குட்பட்ட ஒரு சாதாரண திணைக்களம் போன்றதே தவிர, அது ஒருபோதும் தன்னாட்சி கொண்ட அதிகாரப் பகிர்வுப் பொறிமுறை அல்ல.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு என்பது கொழும்பின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்ளோ அல்லது ஆளு நரின் விருப்பு வெறுப்புகளுக்குள்ளோ அடங்கிவிடக் கூடியதொன்றல்ல. சாவகச்சேரி மற்றும் வவுனியா விவகாரங்கள் தமிழ் சமூகத்திற்கு உணர்த்தும் பாடம் என்னவெனில், அதிகாரங்கள் அனைத்தும் ஒற்றை மையத் தில் குவிந்திருக்கும் வரை தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பதேயா கும். எனவே, தமிழ்த் தேசியத் தரப்புகள் '13' என்ற 'வெற்றுக் கோதுக்குள்' முடங்கிக் கிடக்காமல், தமிழ் மக் களின் பூர்வீக நிலத்தையும், சுயநிர்ணய உரிமையையும், இறையாண்மையையும் மதிக்கக் கூடிய ஓர் உன்னத மான சமஷ்டித் தீர்வை நோக்கியே தங்களின் அரசியல் நகர்வுகளை ஒருங்கிணைக்கவேண்டும். ஒற்றையாட் சியின் நிழலில் ஒட்டவைக்கப்படும் எந்தவொரு தீர்வும், தமிழ் மக்களின் உரிமைகளை என்றோ ஒருநாள் பழி வாங்கும் என்பதுதான் கசப்பான வரலாற்று உண்மை.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021 493 1110
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : adv@uthayan.com




### பொய்யாமொழி

**அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியும் கேடீன் பது**

**பொருள்:** பொறாமை உடையவர்க்கு வேறு பகை வேண்டா. அஃது ஒன்றே போதும், பகைவர் தீங்குசெய்யத் தவறினாலும் தவறாமல் கேட்டைத் தருவது அது.



## தொல்பொருள் இடங்களை பாதுகாக்க வேலைத்திட்டம்

இன்று முதல் ஆரம்பம்!

**கொழும்பு, ஜூலை 7**

**நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள ஆயிரம் தொல் பொருள் இடங்களைப் பாதுகாக்கும் தேசிய வேலைத்திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

இலங்கையின் வரலாற்று மற்றும் தொல்பொருள் மதிப்புமிக்க இடங் களை இனங்கண்டு, அவற்றின் அகழ்வாராய்ச்சி, ஆய்வு மற்றும் பாதுகாப்புப் பணிகளை விரைவு படுத்துவதே இதன் நோக்கமாகும் என்று புத்தசாசன, மத விவகாரங் கள் மற்றும் கலாசார விவகாரங்கள் பிரதி அமைச்சர் கமகெதர திஸா நாயக்க தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின்கீழ் ஆயிரம் தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக அடையாளங்கா ணப்பட்ட 100 இடங்களில் பணிகள் தொடங்கப்படும். அதேவேளை இந்தத் திட்டத்துக்கு பொதுமக்க ளின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், அந்தந்தப் பகுதிகளை மையமாகக் கொண்டு சமூகப் பாது காப்புக் குழுக்கள் அமைக்கப்பட வுள்ளன். இந்தக் குழுக்கள் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகள், தொல் பொருள்திணைக்களத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளின் வழிகாட்டல் மற்றும் நேரடித் தலையீட்டின் கீழ் செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



## விபத்தில் இளைஞர் சாவு

குருநாகல், ஜூலை 7

மோட்டார் சைக்கிளும் ஓட் டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந் துள்ளார். இந்த விபத்து குரு நாகல் மாவட்டம் நாரம்மல வாரியபொல வீதியில் சியம் பலாகஸ் கொட்டுவ மதீனா தேசிய பாடசாலைக்கு அரு கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது. அதிவேகமா கப் பயணித்த மோட்டார் சைக்கிள் பாடசாலைக்கு அருகில் ஓட்டோவுடன் மோதுண் டது. விபத்தில் காயமடைந்த 19 வயதுடைய இளைஞர், உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல் லப்பட்ட போதிலும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள் ளார். விபத்துத் தொடர்பாக ஓட்டோவின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (க)

## டொலரின் விற்பனை விலை வீழ்ச்சி



கொழும்பு, ஜூலை 7

இலங்கை மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதத் தரவு களின்படி, அமெரிக்க டொல ரின் விற்பனை விலை குறைந் துள் ளது. நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை ரூ. 339.88 ஆக பதி வாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அமெ ரிக்க டொலரின் விற்பனை விலை 340.44 ரூபாவாகக் காணப்பட்டது. வெளிநாட்டு நாணயச் சந்தையின் நகர்வு கள் மற்றும் பொருளாதாரக் காரணிகளுக்கு அமைவாக நாணய மாற்று விகிதங்களில் தினசரி மாற்றங்கள் ஏற்படக்கூ டும் என பொருளாதார நிபுணர் கள் தெரிவிக்கின்றனர். (எ-இ)

## மாயமான துப்பாக்கி பாலத்துக்கடியில் மீட்பு!

கொழும்பு, ஜூலை 7

யட்டியந்தோட்டை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்குச் சொந்தமான துப்பாக்கி காணா மல் போன நிலையில், அது பாலத்துக்கடியில் ஆழமான பகுதியில் மறைத்து வைக்கப்பட் டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள் ளது. குறித்த பொறுப்பதிகாரி யான உப பொலிஸ் பரிசோதகர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள நிலையில், துப்பாக்கியைத் தேடி பொலிஸ் கடற்படைப் பிரிவின் சுழியோடிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், யட்டி யந்தோட்டை கராகொட பாலத் துக்கு அடியில் ஆழமான பகுதி யில் மறைத்து வைக்கப்பட்டி ருந்த நிலையில் துப்பாக்கி கண் டெடுக்கப்பட்டுள்ளது. காணாமல் போனதாகக் கூறப்பட்ட துப்பாக்கி ஆற்றில் கண்டுபிடிக்கப்பட்ட சம் பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது. (க-இ)

நாளை

புதன்கிழமை-ஆனி 22

08.07.2026

சுபநேரம் : 04.28 – 05.58

ராகுகாலம் : 11.58 – 01.28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# தேசிய போசாக்கு மாத விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 7

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கண்காட்சி பருத்தித்துறை எஸ்.எஸ்.திருமண மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. 'சிற்றுண்டிகளைப் பற்றி மீளச் சிந்திப்போம். இயற்கையான மற்றும் ஆரோக்கியமான சிற்றுண்டிகளைத் தேர்வு செய்வோம்' என்ற தொனிப்பொருளில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

பருத்தித்துறை மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி சத்தியரூபன் சூரிகா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகரபிதா வின்சென் டி போல் டக்ளஸ் போல், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை நகரசபையின் பதில் நகரபிதா நா.பத்மநாதன், வட இந்து மகளிர் கல்லூரி அதிபர், பருத்தித்துறை சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் மற்றும் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது உணவுக் கூம்பு, மகிழ்ச்சியான குழந்தை அறை, ஆரோக்கியமான காலை உணவு, மதிய உணவு, மாலை உணவு, சிற்றுண்டிகள், பாரம்பரிய சிற்றுண்டிகள், ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் விருத்தியின் முக்கியமான கூறுகள், பற்கள் பராமரிப்பு, மாதிரிப் பாடசாலை சிற்றுண்டிச்சாலை, திண்மக்கழிவு முகாமைத்துவம், வீட்டுத்தோட்டம், தேனி வளர்ப்பு போன்ற தலைப்புகளில் காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றிருந்தன. (எ-41-100)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத் தொடரின் 60ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், திருவாசகப்பிரியன், சைவப்புலவர் ச. முகுந்தனின் 'மகாகாளர் வருபடலம்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஜூலை 7


சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்13 எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், திருவாசகப் பிரியன், ச.நவநீதனின் 'அன்பே சிவம்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## மாம்பழத்தின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணத்தில் கறுத்தக் கொழும்பன் மாம்பழத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குடாநாட்டின் பிரதான சந்தைகளில் மாம்பழங்களின் வருகை அதிகரித்துள்ள நிலையில், முன்னர் ஒரு கிலோ 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கறுத்தக் கொழும்பன் மாம்பழம் தற்போது 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. சுற்றுலாப்பயணிகள் அதிகளவானோர் இவற்றைக் கொள்வனவு செய்வதைக் காண முடிகின்றது. (க-17)



நெடுந்தீவுப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. இந்தக் கற்றல் உபகரணங்களை நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கியது. (க-17)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தாய்மாமன்வகையில்எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணை கேட்பதை வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதற்கேற்ப பணவரவும் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. எதிரிகள்வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** சகோதரவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில்தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும். பிள்ளைகளால் வீண்செலவுகள் ஏற்படவாய்ப்பு உள்ளது.


**தனுசு:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்தினருடன் உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். எதிரிகள் பணிந்து போவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மீனம்:** கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



### கிளிநொச்சியில்

# நவீன விவசாய முறையில் தர்பூசணிச்செய்கை அறுவடை

கிளிநொச்சி, ஜூலை 7

தர்பூசணிச் செய்கையின் நவீன பயிரிடல் முயற்சியின் முதலாவது அறுவடையை கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

அலுவலகச் சூழலை பசுமையாக மாற்றுவதையும், ஊழியர்களுக்கு மனநலன் மற்றும் பணித்திறனை அதிகரிக்கும் சூழலை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டு, ஊழியர் நலன்புரிச் சங்கம் பல்வேறு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. அதற்கமைய தர்பூசணிச் செய்கையின் முதலாவது அறுவடை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நவீன விவசாய முறையில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தர்பூசணிச் செய்கை தற்போது சிறந்த விளைச்சலை வழங்கியுள்ளது.

பல்வகைப் பயிரிடல் மூலம் விளைச்சல் நிலைத்தன்மையை அதிகரிப்பதும், நவீன விவசாய முறைகளை ஊக்குவிப்பதும் இந்த முயற்சியின் பிரதான நோக்கமாகும். கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் இந்த முயற்சியை நவீன விவசாயத்தைக் கற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள், பசுமை வீட்டு விவசாயத்தை முயற்சிக்க விரும்பும் இளைஞர்கள் நேரில் வருகை தந்து பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# வலைப்பந்தாட்ட அணிக்கு பாதணிகள் அன்பளிப்பு!

மன்னார், ஜூலை 7

இலங்கை தேசிய வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட மாவட்ட சம்மேளனங்களுக்கு இடையிலான தேசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும், மாகாணப் போட்டியிலும் பங்குபற்றும், மன்னார் மாவட்ட வலைப்பந்தாட்ட அணியினருக்கான பாதணிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் பாதணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. (ஐ)



# INVITATION FOR BID 2026/09
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. **The Chairman, Local Authority Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**, To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
**"Bidders Shall also register themselves with the Register of Public Contracts Sri Lanka, in terms of the Public Contract Act No 03 of 1987.**
3. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-07-07 To 2026-07-21 during 09:00 hrs and 15:00 hrs**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman,** Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee,** Valikamam East Pradeshiya Sabha, Puttur **on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall,** Valikamam East Pradeshiya Sabha, Puttur **as stated intable below.**
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2026-07- 07 To 2026-07-21** | | | | |
| | **Pre-Bid Conference** | | | **At 10.30 A.M on 2026-07-14** | | | | |
| | **Closing and Opening of Bids** | | | **At 2.00 P.M on 2026-07-22** | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estim ated Cost (Rs.) In Million (without VAT)** | **Cont ract Period (Days)** | **Grade Required** | **Non-Refundab le Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period (Days)** |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| NP/14/41(13)/ 4/Council / 04/2026/10 | Package 01<br>* Reconstruction of Echchankaddai veethy at Puttur,<br>* Reconstruction of Kumarasamy Veethy by lane at Puttur,<br>*Reconstruction of Arivoli veethy by lane at puttur<br>*Reconstruction of Easwaran Kovil veethy at Puttur | 7.51 | 91 | C8, C7 & C6 (High way) | 4,000.00 | 76,000.00 | 04.11.2026 | 77 |
| NP/14/41(13)/ 4/Council / 04/2026/11 | Package 02<br>* Reconstruction of Vevipuram 1 st lane at Achchelu,<br>* Reconstruction of Kanthy Veethy at Pojiddy,<br>*Reconstruction of Malarmathy 1st lane at Achchelu. | 6.50 | 91 | C8, C7 & C6 (High way) | 4,000.00 | 65,000.00 | 04.11.2026 | 77 |
| NP/14/41(13)/ 4/Council / 04/2026/12 | Package 03<br>* Reconstruction of Arasady road – lane "A" at Atchuvely,<br>* Reconstruction of Atchuvely central college ground road at Atchuvely, | 3.25 | 91 | C9, C8 & C7 (High way) | 2,500.00 | 33,000.00 | 07.10.2026 | 49 |
| NP/14/41(13)/ 4/Council / 04/2026/13 | Package 04<br>* Reconstruction of Point pedro road by lane , 3rd lane.<br>* Reconstruction of vairavar kovil back road at Atchuvely<br>*Reconstruction of puthuthoppu veethy 1 st lane at Atchuvely | 5.95 | 91 | C8, C7 & C6 (High way) | 4,000.00 | 60,000.00 | 04.11.2026 | 77 |
| NP/14/41(13)/ 4/Council / 04/2026/14 | Package 05<br>* Reconstruction of Pandithar Thampaiya veethy at Puttur,<br>* Reconstruction of kalimathy veethy 1st lane at Puttur,<br>*Reconstruction of Sinhapuliyady veethy at Puttur,<br>*Reconstruction of Manthiramalai veethy at Avarangal | 8.01 | 91 | C8, C7 & C6 (High way) | 4,000.00 | 81,000.00 | 04.11.2026 | 77 |


Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur . 07/07/2026

(CR/47797) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 08 . 1953



மறைவு 04 . 07 . 2026

## அமரர் ஆறுமுகம் ஏகானந்தசிவம்

**(ஓய்வு நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் - யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ் மாநகரசபை)**

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 340 கோயில் வீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஏகானந்தசிவம் (சிவம்) அவர்கள் 04.07.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம் - வியாழம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுருநாதன் - யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மீராதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தபிள்ளை, சதாநந்தசிவம், நித்தியானந்தசிவம், ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜலக்ஷி, கஜானனி , அபீசன், அனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாரங்கன், சிந்து ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும், சஞ்சயன் , மனுஜ், சஷாங்கி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரபி, உமை, அருவி, இயல் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சாட்சாயினி, சகுந்தலாதேவி, தனிஸ்ராதேவி, அமரர் ரவீந்திரன், ஈஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.07.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் ( நல்லூர் ) நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.30 மணியளவில் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 557 3860 - அபீசன், 077 967 7158 - அனுஜன்**

(CS/32104) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 01 . 1956



மறைவு 05 . 07 . 2026

## விசுவலிங்கம் விக்கினேஸ்வரன் (குஞ்சன்)

சிவன் புது வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், குளுக்கண்டி லேன், கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் விக்கினேஸ்வரன் (குஞ்சன்) அவர்கள் கடந்த (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும், பாலதேவி (ஓய்வுநிலை நெசவுப் போதனாசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், டினேஷ் (அவுஸ்திரேலியா), தர்மதா (ஆரம்பக்கல்வி ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), அஜிதா, ரம்பா ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபனா (அவுஸ்திரேலியா), கிருபன் (வலய முகாமையாளர், சிங்ககிரி பிறைவட் லிமிட்டற்), கருணதாஸ் (கிளை முகாமையாளர், யாழ்கோ), பவித்ராம் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், லீலாவதி, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்வித், அக்சனா, கிஷானா, ரியானா, ரித்திகா, தஸ்வின், அதீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2026) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
குளுக்கண்டி லேன், கட்டப்பிராய்.
077 372 1549

(CS/61822) J-1

# அரியவகை விலங்குப் பாகங்களுடன் பெண் கைது

கம்பஹா, கலகெடிஹேன பகுதியில் விற்பனைக்காக சட்டவிரோதமாக அரிய வகை வனவிலங்குப் பாகங்களை வைத்திருந்த பெண் ஒருவர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 45 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. விமானப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரியார்
குபேரன் கட்டடம், சங்கானை.
**Tel: 077 675 1649**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை நடுக்கட்டல் உத்தியோகத்தர் நியமனத்திற்கான விண்ணப்பம் கோரல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின, மானிப்பாய் கிராம, பண்டத்தரிப்பு பட்டின மற்றும் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகங்களுக்கான நடுக்கட்டல் உத்தியோகத்தர் நியமனத்திற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் நூலகங்களில் பார்வையிட முடியும். இப்பதவிக்குரிய விண்ணப்ப முடிவு திகதி 05.08.2026 ஆகும்.

க.ஜெசீதன்
தவிசாளர்

# நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

த.தங்கமயில் சுவாமிகளின் 30ஆம் நாள்நினைவேந்தல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம்பெறும். அன்றைய தினம் சிறப்புப் பூசைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் இடம் பெறும். (க)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 09 . 1943



மறைவு 05 . 07 . 2026

## செல்லையா ஞானசேகரம்பிள்ளை (ஞானி)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஞானசேகரம்பிள்ளை (ஞானி) அவர்கள் (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் புதல்வனும், அன்னலட்சுமி (பேபி) அவர்களின் பாசமிகு கணவரும், லோகநாதன் (பிரதம கணக்காளர் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வ.மா), நளினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ம.சுரேஷ் (கனடா), லோ.கார்த்திகா (இயன் மருத்துவர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்வின், அபிஷேக், அர்விகா, ஸ்ரீகா, அக்சரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாவிட்டபுரம் வதிவிடத்தில் நாளை (08.07.2026) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: லோகநாதன் (மகன்)**
**குடும்பத்தினர்**
**கந்தசுவாமி கோவிலடி, மாவிட்டபுரம்.**
**077 778 7545**

(CS/61821) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூ.ஆர். முறைமையின்படியே எரிபொருள் வழங்கல் தொடரும்




## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 7**

**நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறைமை எந்தவித தடையுமின்றித் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.**

இந்தத் திட்டத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம்எந்தவிததீர்மானமும் எடுக்கவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ள அவர், விநியோக முறைமையில் மாற்றங்கள் ஏற்படலாம் எனப் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் எதிர்காலத்திலும் தடையின்றி எரிபொருளை விநியோகிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டு அளவை அதிகரிப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை எனவும், மறுஅறிவித்தல் வரை தற்போதைய ஒதுக்கீட்டு எல்லைகளே தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ரின் இலக்கம் பெற யாழில் நீள வரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 7

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுக் கொள்வதற்காக நேற்றுத் திங்கட்கிழமை காலை முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகத்திற்கு முன்பாக மக்கள் மீண்டும் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.


வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்குக்கால அவகாசம் எதுவும் விதிக்கப்படவில்லை என யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு வெளியிட்டிருந்தார். எனினும், அந்த அறிவிப்பையும் மீறி நேற்று அலுவலகத்துக்கு முன்பாகப் பொதுமக்கள் நீண்ட வரிசையில் திரண்டிருந்தமையைக் காண முடிந்தது. (எ-66)

# சிறுபோக நெல் அறுவடை கிளிநொச்சியில் ஆரம்பம்


கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி மாவட்டத்தில் 2026ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது. மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ் சுமார் 21,160 ஏக்கரில் இம்முறை சிறுபோகச் செய்கை பண்ணப்பட்டுள்ளது. தற்போது அறுவடை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஏக்கர் ஒன்றுக்கு 20 முதல் 25 மூட்டைகள் மாத்திரமே விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். தற்போதைய நெல் விலையுடன் ஒப்பிடுகையில் இவ்விளைச்சல் போதுமானதாக இல்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், உரங்களின் விலை 14,000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதனாலும், எரிபொருள் விலை உயர்வால் அறுவடை இயந்திரங்களின் கூலி அதிகரித்துள்ளதாலும் செலவு பன்மடங்கு உயர்ந்துள்ளது. எனவே, அரசாங்கம் அறிவித்துள்ள ஒரு கிலோ நெல்லுக்கான 120 ரூபா உத்தரவாத விலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினர் உரிய நேரத்தில் நெல்லைக் கொள்வனவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)



கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மக்கள் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில்32 ஆவது புத்தக அரங்க விழா நடைபெற்றது. (எ-இ)



# நீர்கொழும்பு கைதிகள் சிலர் போகம்பறைக்கு

நீர்கொழும்பு, ஜூலை 7

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இடம்பெற்று வரும் மோதலைத் தொடர்ந்து அங்கிருந்த சில கைதிகளை கண்டி போகம்பறை சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறைக்குள் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதைக் கருத்திற்கொண்டும், வன்முறைகளைக் கட்டுப்படுத்தி கைதிகளைத் தனிமைப்படுத்தும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# குமுதினி படகுச் சேவை அடுத்த மாதம் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெடுந்தீவு-குறிகட்டுவான் இடையேயான சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பிலுள்ள குமுதினிப் படகின் திருத்த வேலைகள் முழுமையாக நிறைவடைந்த பின்னர் அடுத்த மாதமளவில் சேவையில் இணைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஊர்காவற்றுறை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள படகின், இயந்திரம் கழற்றப்பட்டு பழுதுபார்க்கும் வேலைகள் முடிவடைந்து, மீளப்பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் படகோட்டியின் பகுதிக்கு புதிதாக கூரை அமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் இருக்கும் முன்,பின் பகுதிகளுக்குமான கூரைகளும் மாற்றப்படவுள்ளன. அதற்கமைவான முழுமையான வேலைகள் நிறைவடைந்ததும் அடுத்த மாதம் சேவையில் ஈடுபடுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# விளையாடிக் கொண்டிருந்தவர் மைதானத்தில் திடீரெனச் சாவு

கொழும்பு,ஜூலை 7

துடுப்பாட்டப் போட்டியின் போது விளையாடிக் கொண்டிருந்த நபர், மைதானத்தில் திடீரெனச் சரிந்து விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பேருவளையில் இடம்பெற்றுள்ளது. பாடசாலை பழைய மாணவர்கள் சங்கத்தால், ஏற்பாடு செய்யப்பட்ட துடுப்பாட்டப் போட்டியின் போது, துடுப்பாட்ட வீரரான சுல்பிகர் என்பவர் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மைதானத்தில் அவருக்கு முதலுதவி அளித்தும் பயனளிக்காத நிலையில், அங்கிருந்த மருத்துவக் குழுவினரின் உதவியுடன் அவர் உடனடியாக அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மாரடைப்புக் காரணமாகவே அவர் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

# முகமாலை, வேம்பெடுகேணியில் மீள்குடியமர 29 குடும்பங்கள் பதிவு

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி முகமாலை மற்றும் வேம்பெடுகேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியேறுவதற்காக 29 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேர் இதுவரை விண்ணப்பித்துக் காத்திருப்பதாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளாலி தொடக்கம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வரையான பகுதிகளில், 1991 முதல் 2009 வரை நிலவிய யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை முழுமையாக மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகிறது. இப்பகுதிகள் முன்னரங்க நிலைகளாக இருந்ததால் அதிகளவான வெடிபொருள் ஆபத்துகள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன.

தற்போது வேம்பெடுகேணி, முகமாலை மற்றும் இத்தாவில் பகுதிகளில் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே மக்கள் மீள்குடியேற்றத்திற் காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதுதவிர, இத்தாவில், முகமாலை, வேம்பெடுகேணி மற்றும் கிளாலி ஆகிய பகுதிகளில் தமது சொந்தக் காணிகளைப் பராமரிப்பதற்கென மேலும் 60 பேர் வரை விண்ணப்பித்துள்ளதாகவும் பிரதேச செயலகம் குறிப்பிட்டுள்ளது. (எ-55)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# சீரான போக்குவரத்துவசதிகளின்றி முல்லைத்தீவில் 88 பாடசாலைகள்!

## நெருக்கடியில் மாணவர்கள், ஆசிரியர்கள்

**முல்லைத்தீவு, ஜுலை 7**

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இரு கல்வி வலயங்களின் கீழ் இயங்கும் 104 பாடசாலைகளில், 88 வரையான பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தினமும் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற 'போக்குவரத்து மற்றும் வீதிப் புனரமைப்பு' தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள உள்ள மாந்தை கிழக்கு துணுக்காய் ஆகிய கல்விக் கோட்டப் பாடசாலைகளும் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழுள்ள ஒட்டுசுட்டான், கரைத் துறைப்பற்று, முல்லைத்தீவு கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகளும் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

பெரும்பாலான கிராமப்புறப் பாடசாலை வழித்தடங்களில் முறையான அரச அல்லது தனியார் பேருந்துச் சேவைகள் முற்றாக இடம்பெறுவதில்லை.

வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், வாகனங்கள் எவையும் இந்தப் பகுதிகளுக்குள் செல்ல முன்வருவதில்லை.

முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தினால், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பின்தங்கிய ஏழை மாணவர்கள் தினமும் பல கிலோமீற்றர் தூரம் கால்நடையாகவும், தங்களது துவிச்சக்கர வண்டிகளிலும் ஆபத்தான காட்டுவழிகள் ஊடாகப் பயணித்துத் தங்களது கல்வி நடவடிக்கைகளைத் தொடரவேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

அதேபோல், வெளிமாவட்டங் களில் இருந்து இங்கு கடமைக்கு வரும் ஆசிரியர்களும் உரிய நேரத்துக்குப் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாமல் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே, மாணவர் களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இந்தப் பகுதிகளுக்கான பேருந்துச் சேவைகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# பேருந்துக் கட்டணம் உயர்வு; முற்றிலும் முரண்பாடானது

## தனியார் சங்கம் எதிர்ப்பு!

கொழும்பு,ஜுலை 7

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தமானது முற்றிலும் முரண்பாடானது என்றும், இதன்மூலம் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள் என்றும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய திருத்தத்தினால் பேருந்துத் தொழிற்றுறை கடுமையான நெருக்கடியைச் சந்திக்கும்.

நாட்டில் தற்போது 10,000க்கும் மேற்பட்ட குறுகிய தூர சேவைப் பேருந்துகளும், சுமார் 3,000 நீண்ட தூர சேவைப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

குறுகிய தூரத்துக்கு 12% கட்டண உயர்வும், நீண்ட தூரத்துக்கு 20% கட்டண உயர்வும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரே வழித்தடத்தில் பயணிக்கும் இருவேறு பேருந்துச் சேவைகளுக்கும் வெவ்வேறு கட்டண முறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதால், நடத்துநர்களுக்கும் பயணிகளுக்கும் இடையே தேவையற்ற முரண்பாடுகளும் குழப்பங்களும் ஏற்பட்டு மக்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாவார்கள். தற்போதைய இந்தக் கட்டணக் கொள்கையின்படி, எதிர்காலத்தில் டீசல் விலை குறைந்தாலும் கூட, குறுகிய தூர சேவைப் பேருந்துகளுக்கான கட்டணங்களை மீண்டும் குறைக்கமுடியாத ஒரு முட்டுக்கட்டை நிலை உருவாகும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இந்தத் தன்னிச்சையான 20 சதவீத நீண்டதூரக் கட்டண உயர்வானது ஒட்டுமொத்தப் பேருந்துத் தொழிலையே முடக்கிவிடும்- என்றார். (ச-இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்றைய தினம் (07.07.2026)
BMICH இல் கல்விமாணி பட்டம் பெறும்
எமது கல்வி நிறுவன இயக்குனர்

**திரு.சிவராசா சிவரூபன்**

அவர்களை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
மேலும் அவருடைய கல்விச்
சேவை தொடர்வதற்கும்
இறைவனுடைய ஆசி
கைகூடட்டும்.

Best Wishes

**வாழ்த்துவோர்:**
**கலைவாணி**
**கல்வி நிறுவன சமூகம்**
**மானிப்பாய் வீதி,**
**கோப்பாய்.**



ICS 321051A

## INVITATION FOR BID 2026
## OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONER OF LOCAL GOVERNMENT.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Assistant Commissioner, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB)
3. Interested eligible bidders may obtain further information from Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman , Pradeshiya Sabha of the respective range and inspect the Bidding Documents at the address given below during office hours.

| Kayts Pradeshiya Sabha | Delft Pradeshiya Sabha |
|---|---|
| Chairman of the Pradeshiya Sabha<br>Kayts.<br>Suruvil Road, Kayts<br>T.P. no. 021 221 1626 | Chairman of the Pradeshiya Sabha<br>Delft.<br>T.P. no. 021 221 5211 |

4. Qualification's requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address of the Local Authorities of the respect ranges from 07.07.2026 to 20.07.2026 from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna on or before 21 July 2026 and 11.00 Hrs . as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.
8. Pre-Bid Conference will be held at the respective Local Authorities .

| Bid ID | Description of Work | Date | Time |
|---|---|---|---|
| NP/14/41(1)/KAYTSPS/PBCG/2026/01 | Construction of shopping complex at Kayts | 17.07.2026 | 10.30 AM |
| NP/14/41(1)/DELFTPS/PBCG/2026/01 | Construction of Community Based Traditional food processing center at Delft | 17.07.2026 | 10.30 AM |


**The table referred to above is**

| Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Deposit - Amount | Required Bid Security - Validity Period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| NP/14/41(1)/KAYTSPS/PBCG/2026/01 | Construction of shopping complex at Kayts | Performance Based Capital Grant | 16.0 | 120 | C7, C6 & C5 (Buildings) | 3,500.00 | 06.10.2026 | 160,000.00 | 03/11/2026 | 77 Days |
| NP/14/41(1)/DELFTPS/PBCG/2026/01 | Construction of Community Based Traditional food processing center at Delft | Performance Based Capital Grant | 16.1 | 120 | C7, C6 & C5 (Buildings) | 3,500.00 | 06.10.2026 | 160,000.00 | 03/11/2026 | 77 Days |

Chairman
Regional Procurement Committee,
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna. 07.07.2026

(GR/47796) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சுற்றாடல் அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் 'அவசரமாக மேற்கொள்ள வேண்டிய காலநிலை தொடர்பான நடவடிக்கை' எனும் தொனிப்பொருளில் பளை மத்திய கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
கல்லூரியின் பிரதி அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக ஓய்வுநிலை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் கலந்து கொண்டார். (ச-9)

## சிறையில்...

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் நேற்றுமுன்தினம் மாலை திடீரெனக் கலவரம் வெடித்தது. போதைப்பொருள் கடத்தலுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களே இந்தக் கலவரத்தை உருவாக்கினார்கள் என்று கூறப்படுகின்றது. சிறைத்துறை அதிகாரிகளின் துப்பாக்கிகள் கைதிகளால் கைப்பற்றப்பட்டதுடன், அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவங்கள் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு ஏழு பேர்வரை உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலையும் கலவரம் தொடர்ந்தது. இதில், சிறைச்சாலை அதிகாரிகள் 7 பேரும், கைதிகள் 19 பேருமாக 26 பேர் உயிரிழந்தனர். அத்துடன், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த நிலையில் அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.
சிறைச்சாலை வளாகத்தில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் என நூற்றுக் கணக்கானோர் குவிக்கப்பட்டு நேற்று நண்பகல் நிலைமை ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மீண்டும் கலவரம் ஏற்படாத வகையில் ட்ரோன்கள் மற்றும் ஹெலிகொப்டர்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன. சிறைக் கைதிகள் பேருந்துகள் மூலம் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
இந்தக் குழப்பங்கள் தொடர்பில் ஆராயவும், அறிக்கை வழங்கவும் ஜனாதிபதி அநுர விசேட குழுவொன்றை அமைத்துள்ளார். அந்தக் குழு இன்றையதினம் சிறைச்சாலையில் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கைதிகளின் உறவினர்கள் சிறைகளுக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபடுவதால் அங்கு நேற்று இரவும் பதற்றமான நிலைமை தொடர்ந்தது. (அ-ம)

## இடைக்காலத்...

உப தவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோரை அந்தப் பதவியில் இருந்தும், அடிப்படை உறுப்புரிமையில் இருந்தும் ஆளுநர் நீக்கியிருந்தார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 24ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதற்கு எதிராக ஞானப்பிரகாசம் கிஷோர் சார்பில் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரனினால் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
இந்த மனு இடைக்காலத் தடைக்கட்டளைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. முறையீட்டாளர் சார்பில் மிக நீண்ட சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன. கிஷோருக்கு எதிராக எந்த விதமான ஊழல் குற்றச்சாட்டுகளும் இல்லை என்பதும், 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் போர்க்காலத்தில் கட்டப்பட்டு இணக்கச் சான்றிதழ் பெறப்படாத கட்டடங்களைக் கொண்ட பெரும்பாலான வர்த்தகர்கள் சாவகச்சேரியில் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினாலேயே, இணக்கச் சான்றிதழைக் கட்டாயப்படுத்தக் கூடாது என நகராட்சி மன்றக் கூட்டத்தில் அவர் உரையாற்றியிருந்தார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. நகராட்சி மன்றக் கட்டளைச் சட்டத்துக்கு உட்பட்டு ஆற்றப்பட்ட இந்த உரையின் காரணமாக அவரை நீக்கியது ஜனநாயகப் படுகொலை எனவும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன.
மனுதாரர் தரப்பின் நீண்ட வாதங்களைச் செவிமடுத்த வடமாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வு நீதிபதி க.சதீஸ்வரன், எதிர்மனுதாரர்களான வடமாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர், தனிநபர் விசாரணை அதிகாரி உள்ளிட்டோருக்கு அறிவித்தல் அனுப்ப இணங்கினார். எனினும், இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்க மறுத்துத் தீர்ப்பளித்தார்.
மற்றைய தரப்பினரின் வாதங்களையும் கேட்டே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்ட நீதிப்தி, முகத்தோற்றமளவில் ஆளுநர் நடைமுறைமுறைகளைப் பின்பற்றியே முடிவுகளுக்கு வந்துள்ளார் எனவும், ஆதலால், இடைக்காலத் தடைகளை வழங்குவது பிழையான முன்னுதாரணங்களை ஏற்படுத்துவதாக அமையும் எனவும் தனது கட்டளையில் குறிப்பிட்டுள்ளார்.
(அ-ம-26-66)

## சிறைச்சாலைக்...

தெரிவித்ததாவது:-
திசைகாட்டி அரசாங்கத்தினர் முறைமை மாற்றம் எனக் கூறிக்கொண்டே ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் கூறிய முறைமை மாற்றம் என்பது இன்று தோல்வி கண்டுள்ளது. நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலுக்கு அரசாங்கம் பொறுப்புகூற வேண்டும்.
சிறைச்சாலை நிர்வாகத்தின் வீழ்ச்சியை நீர்கொழும்புச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.
சிறைச்சாலைக்குள் உயிரிழப்புகள் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என தற்போதைய ஜனாதிபதி அன்று எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த வேளையில் குறிப்பிட்டிருந்தார். எனவே, மேற்படி சம்பவத்துக்கு தற்போதைய அரசாங்கம் முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டும்-என்றார்.
(அ-ம-இ)

## எல்...

மத்தியில் தற்போது பதற்றமான நிலையை அவதானிக்க முடிகின்றது. உண்மையில் எல் நினோ என்பது பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடிய காலநிலை நிகழ்வுதான். உலக அளவில் சில நாடுகளில் கடுமையான வறட்சியும், இன்னும் சில பகுதியில் வெப்ப அலைகளையும் தோற்றுவிக்கும். எல் நினோ நிலைமையானது பொதுவாக ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் முடிவடையாமல் சுமார் 9 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கக்கூடியது. அது இலங்கையின் பருவமழைக் காலங்களுக்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
தற்போதைய நிலையில் உலகளவில் எல் நினோ நிலைமையானது பலவிதமான மட்டத்திலேயே காணப்பட்டாலும், இது வேகமாக தீவிரமடைந்து வரலாற்றில் இதுவரை பதிவாகாத அளவுக்கு வலுவான மற்றும் சக்தி வாய்ந்த ஒரு நிலையை எட்டக்கூடும் என்று உலக வானிலை அமைப்பு மற்றும் சர்வதேச காலநிலை ஆய்வு மையங்கள் கணித்துள்ளன.
இலங்கையை பொறுத்தவரையில் தற்போது தென்மேற்கு பருவமழைக் காலத்தின் மழைவீழ்ச்சியை இந்த எல் நினோ நிலைமை கணிசமாகக் குறைக்கும் என்பதால் நடப்பு ஜூலை மாதத்தின் இறுதிப் பகுதியும், அதனைத் தொடர்ந்து வரும் ஆகஸ்ட் மாதமும், செப்ரெம்பரின் ஆரம்ப பகுதியும் மிகவும் வறட்சியான காலநிலையை எதிர்கொள்ளக்கூடும்-என்றார். (அ-ம)

## கோத்தாவின்...

திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட அந்த மனுமீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கக்கோரிய கோத்தாபய ராஜபக்சவின் மனுவை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ-ம-இ)

## குளத்தை...

இந்தப் போராட்டம், பேரணியாக வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்றது. அங்கு போராட்டக்காரர்கள் தங்களது கோரிக்கைகள் உள்ளடங்கிய மனுவை வவுனியா மாவட்டச் செயலரிடம் கையளித்தனர்.
மனுவைப் பெற்றுக்கொண்ட வவுனியாமாவட்டச்செயலர்பி.ஏ.சரத்சந்திர, குறித்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரிடம் உறுதியளித்தார். (அ-ம-110)

## புன்னைநீராவியில்....

என நடைமுறைக்குவரும் வகையிலேயே இவ்வாறான இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 6 கிராமங்களை உள்ளடக்கி 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒரு கிராம அலுவலர் பிரிவில் இருந்துவந்த நிலையிலேயே தற்போது அது இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (அ-ம-316)

## அரச...

சூழல்பாதுகாப்பு அதிகாரசபையின் வாகனமும், குறித்த முதியவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த முதியவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## கலவரத்துக்கான...

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்துக்கான பொறுப்பை நீதியமைச்சர் என்ற ரீதியில் ஏற்பதற்குத் தயாராக உள்ளேன். உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, எதிர்காலத்தில் இப்படியொரு சம்பவம் மீள நிகழாமல் இருப்பதை எமது அரசாங்கம் உறுதிப்படுத்தும். சிறைச்சாலையில் தற்போது பதற்றமான நிலை இல்லை. இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமல் இருப்பது உறுதிசெய்யப்படும் - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# யாழ். இந்து ஹொக்கி அணி தேசியமட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்.இந்துக் கல்லூரியின் ஹொக்கி அணி, மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில், மூன்றாம் இடத்தைப் பெற்று, தேசியமட்டப் போட்டியில் பங்கேற்கும் தகுதியைப் பெற்றுள்ளது.


யாழ்.இந்துக் கல்லூரி ஹொக்கி விளையாட்டு சுமார் 40 ஆண்டுகளாக கைவிடப்பட்டிருந்தநிலையில், 2022 ஆம் ஆண்டு ஹொக்கி அணி மீள நிறுவப்பட்டு, திட்டமிட்ட பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பாடசாலை வரலாற்றில் இந்த அணி இம்முறை முதன்முறையாக தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (க)

# சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலைய அங்கத்தவரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனுமாகிய சுமித்திரன் கஜானன், அகில இலங்கை பாடசாலை ரீதியிலான கோலூன்றிப் பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரைக் கௌரவிக்கும் நிகழ்வு, மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் ந.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக சவாகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் என்.சர்வேஸ்வரன் கலந்துகொண்டார். குறித்த மாணவனுக்கு மோகனதாஸ் சனசமூக நிலையம் மற்றும் மோகனதாஸ் சனசமூக நிலைய ஐரோப்பா கிளை ஆகியன இணைந்து 50 ஆயிரம் ரூபா பணப் பரிசை வழங்கிக் கௌரவித்தனர். (க)





# கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைக்கு புதிய உறுப்பினர்

முல்லைத்தீவு, ஜூலை 7
கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் முள்ளியவளை கிழக்கு வட்டார உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும், பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ள நிலையில், அவரது வெற்றிடத்துக்கு கிட்டிணபிள்ளை சிவகுரு புதியஉறுப்பினராகநியமிக்கப்பட்டுள்ளார்.தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர்எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்ட அறிவிப்புக்கு அமைய புதிய பிரதேசசபை உறுப்பினர் நியமிக்கப் பட்டுள்ளார். இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கரைதுறைப்பற்றுப்பிரதேசசபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிந்துசா சசிக்குமாரால் கடந்த 2 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை கிட்டிணபிள்ளை சிவகுரு தற்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் கரைதுறைப்பற்று பிரதேச கிளையின் பதில் தலைவராகவும், முல்லைத்தீவு மாவட்ட எல்லைக் கிராமங்களை அடங்கிய கரிகட்டுமூலை தெற்கு வட்டாரக் கிளையின் தலைவராகவும் பதவி வகித்து வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (க-66)



# மண்சரிவால் பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களுக்கு புதிய வீடு

பதுளை, ஜூலை 7
இந்திய அரசாங்கத்தின் நிதி மானியம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அனுசரணையுடன் பசறையில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களுக்கு, புதிய வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது.

இந்திய வீட்டுத்திட்டத்தின் 4ஆம் கட்டத்தின்கீழ் பதுளை மாவட்டம், பசறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கனவரெல்ல பகுதியில் ஆரம்ப அடிக்கல் நாட்டப்பட்டது. ஒரு நிரந்தர வீட்டின் கட்டுமானப் பணிகளுக்காக இந்திய அரசாங்கம் தலா 28 இலட்சம் ரூபா நிதி மானியத்தையும், வீதிகளுக்கான வசதிகள், நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட மேலதிக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் ஒரு வீட்டுக்குத் தலா 4 இலட்சம் ரூபா நிதியையும் ஒதுக்கியுள்ளது. அதற்கமைவாக ஒரு வீட்டுக்கு 32 இலட்சம் ரூபா நிதி முதலீடு செய்யப்படவுள்ளது.10 ஆயிரம் வீடுகளைக் கொண்ட மாபெரும் இந்திய வீட்டுத் திட்டத்தின், நான்காம் கட்டத்தின்கீழ் பசறை கனவரெல்ல பகுதியில் இந்த 57 வீடுகளும் நிர்மாணிக்கப்ப டவுள்ளன. (க)




# 5000 மீற்றர் ஓட்டத்தில் அபிஷாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ. அபிஷா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளனத்துக்கு உட்பட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ. அபிஷா தங்கப் பதக்கத்தையும், சாவகச்சேரி பிரதேச செயலக இளைஞர் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.பதுமிகா வெள்ளிப்பதக்கத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ரி. பிருத்திகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (க)

**பெண் வேலையாள் தேவை**

அரியாலையில் வீட்டோடு தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கும், பிள்ளை பராமரிப்பிற்கும் பெண் வேலையாள் தேவை.

**தொடர்பு: 0777 84 45 24**

(CS 31771) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.